சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு.G.கிருஷ்ணன், B.A., L.L.B.,
சார்பு நீதிபதி,
திருவாரூர்.

அசல் வழக்கு எண்.44/2020

வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. S. ஷர்மிளா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: திரு. சுப்ரமணியன் | த/பெ:சுந்தரம் |
| | க/பெ : |
| வயது: | ஊர் : |
| தொழில்: | அலைபேசி எண்: |
| தேதி: 12.09.2024 | முகவரி: |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி …**

பிரதிவாதி எனது அக்கா சரோஜாவின் மகன் மகேந்திரனின் மனைவி என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிக்கும், அவரது கணவர் மகேந்திரனுக்கும் விவாகரத்து வழக்கானது இந்நீதிமன்றத்திலேயே 13/2008 என்ற வழக்கு நடைப்பெற்றது என்று சொன்னால் சரிதான். மகேந்திரன் கோரிய விவாகரத்து வழங்கப்படாமல் மேற்படி எச்எம்ஓபி.எண்.13/2008 ஆனது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதன் பின்னர் மகேந்திரன் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து

அதன் மூலம் விவாகரத்து பெற்றார் என்று சொன்னால் சரிதான். மேற்படி மகேந்திரன் இன்றும் சமூகம் நீதிமன்றத்தில் என்னுடன் ஆஜராகியுள்ளார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு நடைபெறும் அனைத்து வாய்தாக்களிலும் அவர் என்னுடன் நீதிமன்றத்திற்கு வருகிறார் என்று சொன்னால் சரிதான், எனது துணைக்காக வருகிறார். தாவா சொத்தானது எனது சகோதரி சரோஜா பெயரிலிருந்து எனக்கு தானமாக வழங்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல,. நான் கிரயத்திற்கு வாங்கியது நான் சொல்லக்கூடிய விவரம் தவறு என்றும், தாவா சொத்தினை எனது சகோதரி எனக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்ததாக சொல்லிதான் வா.சா.ஆ.1 ஆன ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயத்திற்குதான் தாவா சொத்தை பெற்றேன். நான் கூட்டுறவு சங்கத்தில் அதிகாரியாக இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதனால் எனக்கு கிரய ஆவணத்திற்கும், செட்டில்மெண்ட் ஆவணத்திற்கும் உள்ள வேறுபாடு நன்கு தெரியும் என்று சொன்னால் தெரியும். அரசுக்கு செலுத்தவேண்டிய கிரய செலவை செலுத்தாமல் இருக்க செட்டில்மெண்ட் எழுதி வாங்கினேன் என சாட்சி தன்னிச்சையாக சாட்சியமளிக்கின்றார். நான் தாக்கல் செய்த தாவா வழக்குரையிலோ, எனது முதல்விசாரணையிலோ மேற்கண்டவாறுதான் தாவா சொத்தை எழுதிப்பெற்றேன் என சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய தொகையை செலுத்தாமல் நான்

ஏமாற்றியுள்ளேனா என்றால் ஆமாம். நான் எனது முதல்விசாரணையில் 11 ஏக்கர் நிலத்தை குத்தகை சாகுபடி செய்துவருவதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் அரசு ஊழியர் என்பதால் குத்தகைக்கு சாகுபடிக்கு நிலத்தை எடுத்து செய்துவரும் சங்கதியை அரசாங்கத்திற்கு தெரிவிக்கவேண்டும் என்றும், அதன்படி நான் எனது துறையின் மூலம் மேற்கண்ட விவரத்தை அரசுக்கு தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு 14 ஏக்கர் நிலம் உள்ளதாகவும், அதுபோக 11 ஏக்கரில் குத்தகை சாகுபடியில் ஈடுபட்டு வருவதாகவும், சொல்லியுள்ளதை உறுதி செய்ய நான் ஏதாவது வருமானவரி கணக்குகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதற்கான ஆவணங்களை இந்த வழக்கு சம்பந்தமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது சகோதரியின் மகன் மகேந்திரனுககும் பிரதிவாதிக்கும் 1995 ஆம் வருடம் திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். நாளது தேதிவரை பிரதிவாதியும், அவரது மகனும் மயிலம்பத்து கிராமத்தில் உள்ள தாவா வீட்டில் வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் வீட்டினை பூட்டை உடைத்து கடந்த 2004 லிருந்து வசித்து வருகிறார். அதற்கு முன்பு அவர் அவரது கணவருடன் சண்டை போட்டுக்கொண்டு சென்றுவிட்டார். தாவா சொத்தில் உள்ள வீட்டில் வைத்துதான் பிரதிவாதிக்கு 1996- ல் துரையும், 2001 -ல் சஞ்சய் என்ற மகன்களும் பிறந்தார்கள் என்று சொன்னால் சரிதான். ஆனால் எனக்கு தேதி விவரம் தெரியாது. பிரதிவாதி ஆக்கிரமித்துள்ள வீடானது 2002 ல் தான் முழுமையானது,

அதற்கு முன்பு அந்த வீடு முழுமை பெறவில்லை, அதனால் வேறு வீட்டில் பிரதிவாதி குடியிருந்தார் என சாட்சி தன்னிச்சையாக சாட்சியமளிக்கின்றார். நான் சொல்வது போல பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள வீட்டை விட்டு எங்கும் செல்லவில்லை என்றும், தொடர்ந்து பிரதிவாதி தாவா சொத்திலுள்ள வீட்டில்தான் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவாவினை நான் தாக்கல் செய்யும்வரை பிரதிவாதி தனது குழந்தைகள், தனது கணவர் மற்றும் மாமியார் ஆகியோருடன் தாவா சொத்தில் உள்ள வீட்டில்தான் ஒன்றாக குடியிருந்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. 2004 வரைதான் அந்த வீட்டில் அனைவரும் ஒன்றாக குடியிருந்தார்கள், அதன்பின்னிட்டு பிரதிவாதி அந்த வீட்டை விட்டு சென்றுவிட்டார். மீண்டும் 19.08.2016 ல் தான் அந்த வீட்டின் பூட்டை உடைத்து பிரதிவாதி அந்த வீட்டுக்குள்ளே வந்தார். பிரதிவாதி அவரது மாமியார் மீது மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்த முயன்றார் என்பதற்காக நான் ஏதாவது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நாளது தேதிவரை நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் காரைக்கால் மாவட்டம் செருமாவிளங்கையில் 6 வருடம் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன், தற்போது வாடகை கொடுக்க இயலாததாலும், எனது மனைவியின் உடல்நிலை சரியில்லாததாலும் செருமாவிளங்கைக்கு அருகேயுள்ள நெடுங்காடு என்ற கிராமத்தில் உள்ள எனது மகள் வீட்டில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தில் உள்ள வீடானது ஆர்.சி.சி.வீடு என்று சொன்னால் சரிதான். அந்த வீட்டின்

அருகே ஒரு ஓட்டுவீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த ஓட்டு வீட்டில்தான் நான் வசித்துவந்தேன் என்றும், அந்த வீட்டினை நான் விற்பனை செய்துவிட்டேன் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் உள்ள ஆர்.சி.சி. வீட்டில் நான் ஒருநாளும் குடியில்லை மற்றும் சுவாதீன அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். அந்த வீட்டில்தான் பிரதிவாதியின் மகன்கள் உள்ளார்கள் என்று சொன்னால் பிரதிவாதியின் இளையமகன் மட்டும்தான் அங்கு உள்ளார். பிரதிவாதியின் மூத்த மகன், அவரது அப்பா மகேந்திரன் மற்றும் எனது சகோதரி சரோஜா ஆகியோர்கள் என்னுடன் உள்ளார்கள். மேற்படி மகேந்திரன் குவைத் நாட்டிற்கு சென்று அங்கு பல வருடங்கள் இருந்தார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு அவர் சம்பாதித்த பணத்தை அவரது தாயார் சரோஜாவிற்குதான் அனுப்பிவைத்துள்ளார் என்று சொன்னால் அது அவர்களின் வரவு, செலவு, அதனால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொல்லக்கூடிய விவரம் தவறு என்றும், நான் தாக்கல் செய்துள்ள தாவா வழக்குரையிலேயே மகேந்திரன் குவைத் நாட்டில் சம்பாதித்த பணத்தை அவரது தாயார் சரோஜாவிற்கு அனுப்பிவைத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மகேந்திரன் அவரது மனைவிக்கு பணம் அனுப்பாமல் அவரது தாயாருக்கு அனுப்பியதுதான் அவர்களுக்குள் பிரச்னை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தவறான காரணங்கள் சொல்லி பிரதிவாதிக்கு எதிராக அவரது கணவரான எனது சகோதரி மகன் மகேந்திரன் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கு

இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் தாவா சொத்தில் பிரதிவாதி குடியிருப்பதை வெளியேற்ற வேண்டி பெயரளவிற்கு மேற்படி மகேந்திரன்தான் அவரது தாயாரை வைத்து எனது பெயரில் செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிவைத்தனர் என்று சொன்னால் எனது சகோதரியை பிரதிவாதி மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்தி சாகடிக்க பார்த்தார். சொத்து எனது சகோதரி பெயரில் இருந்ததால், அவரை கொல்ல பார்த்ததாக எனது சகோதரி நினைத்து, என் மீது இருந்த பாசத்தின் காரணமாக எனது சகோதரியே தாவா சொத்தினை எனக்கு தானமாக எழுதிவைத்தார். இந்த விவரம் தாவா வழக்குரையிலோ, முதல்விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. இதற்கு முன்பாக நான் சாட்சியமளிக்கும் போது தாவா சொத்தை நான் கிரயம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது சகோதரிக்கு பாசம் இருந்திருந்தால், அவர் அவரது மகன் அல்லது பேரன்கள் பெயரில்தான் சொத்தை எழுதிவைத்திருப்பார் என்றும், மகேந்திரனின் தூண்டுதலின் பேரில் எனது பெயரில் தாவா சொத்து சம்பந்தமாக பெயரளவு ஆவணம் ஏற்படுத்த வேண்டிதான் வா.சா.ஆ.1 ஆன செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்தினை ஆதியில் நான்தான் வாங்கினேன். என் சகோதரி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரது பெயரில் 32 குழியை எழுதிக்கொடுத்தேன், அதற்காகதான் அவர் எனது பெயரில் தாவா சொத்தினை செட்டில்மெண்டாக எழுதிக்கொடுத்தார். அந்த விவரங்களை

நான் தாவா வழக்குரையிலோ, எனது முதல்விசாரணையிலோ சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் சொல்லும் விவரத்தை காட்ட எந்தவித ஆவணங்களும் இந்த தாவா சம்பந்தமாக நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 முதல் 13 வரையிலான ஆவணங்களானது இந்த வழக்கிற்காக பின்னிட்டு என்னால் தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. அதிலுள்ள வீட்டு எண்ணும், நான் சொல்லும் வீட்டு எண்ணும் மாறியுள்ளது என்று சொன்னால் சரிதான். முதலில் புல எண்.158/2 என்று இருந்ததை மறு சர்வேயில் 158/10 என மாறியுள்ளது. திருமணமானது முதல் தாவா சொத்தினை பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றும், நான் பொய்யான தஸ்தாவேஜ்களை உருவாக்கி கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி திருமணம் ஆனது முதல் தனது மாமியாருக்கு சொந்தமான வீட்டில் அவர்களுடன் சேர்ந்து அவர்களின் அனுமதியின் பேரில் குடியிருந்து வந்ததால், அந்த சொத்து பிரதிவாதிக்கு பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, c=+91
Date: 2024.09.13 10:30:14 +0530